5-1991

# அமெரிக்க நலனை பாதுகாக்குமாறு அரசு உத்தரவு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அமெரிக்க நலன்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது அமெரிக்க-இலங்கை உறவில் புதியதிருப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் இதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேலும் இலங்கையின் பொருளாதாரநிலையை முன்னேற்ற உதவுமாறும் இலங்கை அமெரிக்காவைக் கோரியுள்ளதும் குறிப்பிடத்தக்கது (சி)

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 சித்திரை 19 ஷவ்வால் 16 இதழ்: 81

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 2-5-1991

## 500 இளைஞர்களை காணவில்லையென புகார்

(கொழும்பு)

தென்பகுதி சிறைகளிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களில் 500க்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணாமல் போய்விட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே. வி. பி. சந்தேகநபர்களென சிறையிலிடப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## 10,000 பேர் பலி

(டாக்கா)

பங்களாதேஷில் கடந்த சில தினங்களாக வீசிவரும் அகோரப் புயலின் தாண்டவத்தில் 10,000க்கும் மேற்பட்டோர் பலியானதாக அஞ்சப்படுகிறது.

நாடே புயலின்பிடியில் சிக்கி மிகமோசமாக சகல பகுதிக

(4-ம் பக்கம் பார்க்க)

## கடலென திரண்டமக்கள் சாட்சி

# "தமிழினத்தவரின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான்"



### - மாத்தயா

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தவர்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்பதனை கடலெனத் திரண்டு வந்திருக்கும் மக்கள் தொகை தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது என நல்லூரில் நேற்று நடந்த மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. மாத்தயா தெரிவித்தார்.

திரு. ராஜன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில்;

இன்று மேதினம் உலகத் தொழிலாளர்களின் திருவிழா. தொழிலாளர் வர்க்கம் தாம் பெற்ற முதல் வெற்றியை கொண்டாடும் இந்நாளில் நாம் இங்கு கூடியுள்ளோம்.

நாங்கள் தமிழர்கள். இந்தத் தேசத்தை ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்து சுதந்திரமாக வாழ்வதற்காகப் போராடுகின்றோம். நாம் இனத்தால், மொழியால் கலாச்சார வாழ்வால், வரலாற்றால் தனித்துவமானவர்கள். நாம் எமது சொந்த நிலத்தில் தலை நிமிர்ந்துவாழ ஆசைகொண்டுள்ளோம். போராடிப் போராடி

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழத்தில் அணி திரண்ட எழுச்சிமிகுமேதினஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமையில், நேற்று யாழ் நகரில் நடைபெற்ற மேதின ஊர்வலத்தில் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

நேற்றுக் காலை 9-15 மணியளவில் மருதனார்மடம் சந்தியில் இருந்து இந்த மாபெரும் ஊர்வலம் ஆரம்பமானது.

ஊர்வலத்தின் முன்பகுதியில், 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்னும் வசனம் பொறித்த பாரிய பதாகை ஒன்றை விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவினர் தாங்கியவண்ணம் வர, அதைத் தொடர்ந்து பாடசாலை மாணவ-மாணவியரின் பாண்ட் வாத்திய இசை

(4-ம் பக்கம் பார்க்க)

## 7 தமிழர் கொலை 6 புலிகள் வீரமரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பழுகாமம் பகுதியில் 7 தமிழர்கள் படையினராலும், ரெலோவினராலும் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை இப்பகுதியை சுற்றிவளைத்த இவர்கள் இந்த 7 தமிழர்களையும் சுட்டுக் கொன்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகத்தை விரைவில் மீட்போம்

(யாழ்ப்பாணம்)

"இந்த மே தினத்தன்று எல்லோரும் ஒரே கொடியின் கீழ் அணி திரண்டிருக்கிறோம். ஒரே தலைமையை ஏற்று பங்களிப்புச் செய்திருக்கின்றோம். வெகுவிரைவில் நாம் தமிழர் தாயகத்தை மீட்போம். அங்கு புலிக்கொடி பறக்கும்".

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி செயலதிபர் யோகி நல்லூரில் நடைபெற்ற மேதின விழாவில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!

நாம் எங்களுடைய தன்னாட்சி உரிமையை வென்றெடுக்கவேண்டும். வெளிப்பொருளாதாரத்தை நம்பி இராது உள்ளூர் உற்பத்தியைபெருக்கி எமது சொந்தக் காலில் நிற்போம். எமது கல்வி மேலை நாட்டு அந்நியர்களுக்கு அடிமைப்படாது மக்களை நேசிக்க சமூக ஒடுக்கு முறைகளை அகற்றுவதற்கு ஏற்ற முறையில் பயன்படவேண்டும்.

சாதி, சமயம் என்ற வேறுபாடுகள் தமிழீழத்தில் அனுமதிக்கமுடியாது. தமிழீழத்தில் 11,000ஹெக்ரர் நிலம் இருக்கிறது இக்காணிகளை முழுவதும்

(4-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு தூதர்கள் திருப்பி அனுப்பப்பட்டன

[வவுனியா]

விடுதலைப்புலிகளின் மேதின விழாவில் கலந்துகொள்ள வந்த 8 வெளிநாட்டுத்தூதர்கள் வவுனியா தடைமுகாமில் தடுக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் புலிகள் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதனை ஏற்று யாழ்ப்பாணம் நோக்கி 8 நாட்டு தூதர்களும், பல பத்திரிகையாளர்களும் வந்தபோதும் வவுனியாவில் படையினரால் தடுக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டனராம். (ஈ)

## புலிகள் அல்ல; பிரேமா அறிவிப்பு

[கொழும்பு]

மொனறாகலையில் அண்மையில் 37 சிங்களவர் கொல்லப்பட்டதற்கு புலிகள் காரணமல்லவென்று ஜனாதிபதி திரு. பிரேமதாசா குறிப்பிட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இனவாதத்தைத் தூண்டிவிடும் நோக்கில் 'நீல ஆடுகளே' இக்கொலைகளைச் செய்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## கரிகாலன் சகோதரர் கடத்திக் கொலை

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உபதலைவரும், மட்டக்களப்பு மாவட்ட தளபதியுமான திரு. கரிகாலனின் சகோதரர், ஆயுதக்குழு ஒன்றால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கரிகாலனின் சகோதரரான திரு. சி. சற்குணநாதன் (37 வயது) மட்டக்களப்பு தொலைத்தொடர்பு திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றிவந்தார். இவர் கடந்தமாதம் 24ம்திகதி இரவு

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர்க்கு சுயாட்சி உரிமை; இந்திய ஜனாதிபதி ஆலோசனை

(மணிலா)

இலங்கைத் தமிழ் மக்கள் நிலை குறித்து இந்தியா அக்கறை கொண்டுள்ளது.

இந்திய ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமன் இவ்வாறு தெரிவித்தார்:

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் திரு வெங்

(4-ம் பக்கம் பார்க்க)

# அகதி முகாம்களில் குடிநீர் சுகாதார வசதிசெய்ய யாழ் மாநகரசபை ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் அகதி முகாம்களில் தஞ்சமடைந்தவர்களின் சுகாதாரம், குடிநீர் விநியோகம் ஆகிய சேவைகளை செய்வதற்கு யாழ் மாநகரசபை ஒழுங்கு செய்துள்ளது.

இவ்வாறு யாழ் மாநகர சபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது!

ஒவ்வொரு முகாம்களிலும் ஏராளமான குடும்பங்கள் அகதிகளாக இருப்பதால், நோய்கள் பரவலாம் இதைத் தடுப்பதற்கு யாழ் மாநகர சபையில் குடும்பநல சேவைப் பிரிவில் இருந்து ஒருமருத்துவரைக் கண்காணிக்குமாறு கூறியுள்ளோம்'' என்றார். [152]

# "தீவுப்பகுதி அகதிகளுக்கு உடுதுணிகள்' உணவு வகைகள், சமையல் பாத்திரங்கள் வழங்குங்கள்!'

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரிலுள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள தீவுப்பகுதி மக்களுக்கு உடு துணிகள், உணவுவகைகள் சமையல் பாத்திரங்கள் தேவைப்படுகின்றன இவற்றினை வழங்கி உதவுங்கள்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் விடுத்துள்ள வேண்டுகோளில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தீவக மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து யாழ். நகருக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். சகல உடைமைகளையும் கைவிட்டு அனுதரவாக வந்துள்ள எமதுசகோதரர்களுக்கு உதவவேண்டியது எமது கடமையாகும் முதல்இரண்டுதினங்களாக உங்கள் ஆதரவுடன் பல்லாயிரக்கணக்கான மக்களது உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளோம். இவர்களின் உடனடித் தேவைகளாக அமைவது முதலிரண்டு நாட்களும் சமைத்த உணவாகும். தொடர்ந்து உடுதுணிகள், உணவு வகைகள், சமையல் பாத்திரங்கள் ஆகியன தேவைப்படுகின்றன. எனவே தேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து பொது மக்கள் தமது ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வழங்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

இது சம்பந்தமான சகல தொடர்புகளையும் இல 83/2 காங்கேசன் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தலைமைக் காரியாலயத்துடனோ அல்லது கொட்டடி வைத்திய சாலை வீதியில் நமசிவாய வித்தியாலயத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளைக் காரியாலத்துடனோ ஏற்படுத்திக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

# வீரவேங்கை ஆனந்தன் புகழுடலுக்கு பூநகரியில் மக்கள் அஞ்சலி

(பூநகரி)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்துடன் இடம் பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை ஆனந்தனின் [ப கமலநாதன்] புகழுடல் அவரது சொந்த இடமான பூநகரிக்கு எடுத்துவரப்பட்டு அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரி வாடியடியில் பொது சந்தையில் வைக்கப்பட்டு மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

மக்கள் அஞ்சலியைத் தொடர்ந்து அஞ்சலி கூட்டம் சிற்றூரவைத் தலைவர் வி. கைலநாதன் தலைமையில் நடைபெற்றது.

அஞ்சலிக் கூட்டத்தில் பூநகரி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ரமேஸ், கலை கலாசாரப் பொறுப்பாளர், வட்ட அவைத்தலைவர் கே. நி. புவனேந்திரன் உட்படபலர் அஞ்சலி உரையாற்றினார்கள் அஞ்சலி உரையின் பின்னர் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலியுடனும் விடுதலைப் புலிகளின் அணிவகுப்பு மரியாதையுடனும் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் உருத்திரபுரம் மாவீரர் மயானத்திற்கு ஆனந்தனின் புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டது. (23)

# வாழைகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் தற்போது வீசும் சோழகக் காற்றினால் பெரும்பாலான வாழை மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

வலிகாமம் கிழக்கு, மேற்கு பகுதி விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (க)

# மண்ணெண்ணை தட்டுப்பாடு நீங்கியது

(காங்கேசன் துறை]

இதுவரை காலமும் மண்ணெண்ணைக்கு இருந்த தட்டுப்பாடு நீங்கி வீதியோரங்களில் விற்பனைக்கு வந்துள்ளது.

மருதனுமடம், இணுவில் பகுதிகளில் வீதியோரத்தில் வைத்து மண்ணெண்ணை விற்பனை செய்யப்படுகிறது.

முன்னர் மண்ணெண்ணைக்கு அலைந்து திரிந்த மக்கள் இப்போது இலகுவாக அதனைப் பெறக் கூடியதாக உள்ளது.

# மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்த 77 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது

[பூநகரி]

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக விடத்தல்தீவு, பள்ளிமுனை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, பாலியாறு பகுதிகளில் 77 குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்ட அரசு சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தினர் இவர்களை நேரில் சென்று பார்வையிட்டு 150 கி. அரிசி, 100 கி. மா, 77 பக்கற் பால்மா, 50 கி. சீனி, 50கி, பயறு போன்ற பொருட்களை 77 குடும்பங்களுக்கும் பகிர்ந்து வழங்கினார்கள். [23]

# கிராமசேவகரை சந்திக்கலாம்

(யாழ்ப்பாணம்)

சரவணை கிழக்கு வேலணை மேற்கு, மத்தி ஆகிய பகுதியை சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள் கிராமசேவை அலுவலகரை இல. 6, மகாத்மாகாந்தி வீதி (மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் சந்திக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில் நிலைய புனரமைப்புக்கு 2 லட்ச ரூபா

(மாங்குளம்)

வவுனியா ரயில் நிலையத்தின் புனரமைப்பு வேலைகளுக்கென சுமார் இரண்டு லட்சம் ரூபா அரசாங்க அதிபரினால் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கென மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. (160)


## வரிவிளம்பரம்

### நீங்களும் விமர்சிக்கலாம்

மீராவெளியீடுகளாகவெளிவந்துள்ள நாவல்களின் விமர்சனங்களை கருத்துக்களை எழுதுங்கள்: புதியதாக வெளியிடப்படும் மீரா வெளியீடுகளில் பிரசுரிக்கப்படும்; விற்பனையாகிறது. துர்க்கா, சுன்னாகம், திருக்கணிதம், சாவகச்சேரி. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும்.

[சி4694]

### மணமகள் தேவை

யாழ், இந்து பெற்றோர் லண்டனில் Accountant ஆகத் தொழில் பார்க்கும் மிக விரைவில் இங்கு வரவுள்ள 32வயது அழகிய மகனுக்கு Accountant பட்டதாரி தரத்தில் அல்லது C I.M A. Computer கல்வி கற்கும் அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். விபர இல. 4691 C/o, ஈழநாடு யாழ்ப்பாணம். (இ 4691)

### சனி நீராடு

ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவித்து வாராவாரம் எண்ணெய் முழுகிவர கண், சிரசு, உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது. சுகவாழ்வு கிட்டுகிறது பைக்கற் ஒன்று 1/50- மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ-1266)

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

## கேள்விப் பத்திர அறிவித்தல்

### 1000 பதக்கங்கள் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக' இலட்சினை பொறிக்கப்பட்ட துருப்பிடிக்காத உருக்குத் தகட்டில் [Stainless Steel] 5 சென்றி மீற்றர் விட்டமும் 2 மில்லி மீற்றர் விளிம்புமுடைய 1000 பதக்கங்கள் வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. தகட்டின் கனம் 18 முதல் 20 கேச் இருத்தல் வேண்டும். பதக்கத்தின் மாதிரிகளை அலுவலகநேரத்தில் பல்கலைக்கழக நிதிக்கிளையில் பார்வையிடலாம்

கேள்விகள் பின்வரும் விபரங்களைக் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக ரூபா 1000 செலுத்திய பற்றுச்சீட்டுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிணைப்பணம் செலுத்தாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

1. கேள்விப்பத்திரதாரர் பெயர்,
   முகவரி,
2. வியாபார அலுவலக முகவரி:
3. தொழில் அனுபவம்:

தெரிவு செய்யப்படும் கேள்விப்பத்திரதாரர் பதக்கங்களை ஒரு மாதத்திற்குள் வழங்கவேண்டும்.

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப்பத்திர தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பதக்கம் வழங்கலுக்கான கேள்விகள்'' என குறிக்கப்பட்டு நிதியாளர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 15-05-91 காலை 10-00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கேள்விகள் 15-05-91 முற்பகல் 10-30 மணிக்கு திறக்கப்படும்.

பதிவாளர்

[எ-1269]



## தமிழீழ காவல்துறை பதவிவெற்றிடம்

**கணக்கு லிகிதர்**

வயது எல்லை: 25 — 45

தகைமை: கணக்கு துறையில் குறைந்தது 5வருட அனுபவம் இருத்தல் வேண்டும்,

**நிர்வாக உத்தியோகத்தர்**

தகைமை; நிர்வாகத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

(எ1268)



## தமிழீழ காவல்துறை பதவிவெற்றிடங்களுக்கான விண்ணப்பம்

காவலர்களுக்கான தகைமைகள்:

[1] வயது எல்லை: 18 வயதுமுதல் 30 வயதுவரை
[2] உயரம்: 5 அடி 6 அங்குலம்
[3] கல்வித்தகைமை: எட்டாம் வகுப்புமுதல் க. பொ. த. [சாதாரணம்] க. பொ. த. [உயர்தரம்] வரை.

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 07-05-91 ற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். பிரதேசக் காரியாலயத்தில் சான்றிதழ் பிரதிகளுடன் சமூகமளிக்கவும்:

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

[எ1267]

# தி. மு. க.விற்கு சவால்விடும்

# காங்கிரஸ்- அ.தி.மு.க.கூட்டணி

அரசியல் தியாகியாக ரத்தம் தோய்ந்த ஆடைகளை அணிந்து வாக்காளர்களைச் சந்திக்கிறது தி.மு.க. அதன் தலைவர் மு. கருணாநிதி வரும் தேர்தலில் எல்லாருடைய அனுதாபத்தையும் பெற்றுவிடமுடியாது. எல்லா ஓட்டுக்களையும் வளைத்துக் கொண்டு விடலாம் என்பதும் நடக்காது. சட்டம் ஒழுங்கு நிலையைப் பாதிக்கச் செய்ததாகக் காரணம்காட்டி ஆட்சியிலிருந்து திடீரெனத் தூக்கி எறியப்பட்ட இந்தக் கட்சிக்குப் பாதகமான வாதங்கள் நிறைய.

1989 ஜனவரியில் நடந்த தேர்தலில் கட்சி 234 இடங்

## தமிழ்நாடு தேர்தல் களம்

களில் 151 இடங்களைக் கைப்பற்றி 33.5 சதவித வாக்குகளைப் பெற்றது. தனித்தனியாகப் போட்டியிட்ட அ. இ. அ. தி. மு. கவும், இந்திரா காங்கிரசும் சேர்ந்து 54 இடங்களை வென்று 51 சதவித வாக்குகளைக் குவித்தன. ஆனால் 1989 இறுதியில் நடந்த லோக சபைத் தேர்தலில் அ. இ. அ. தி. மு. கவும், இந்திரா காங்கிரசும் சேர்ந்து தி. மு கவை இருந்த இடம் தெரியாமல் செய்துவிட்டன. முன்பு வெற்றிபெற்ற இரண்டுதொகுதிகளையும் கூட தி. மு. க. இழந்தது.

தேர்தல் கணக்கு அ. இ. அ. தி. மு. க. இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்குச் சாதகமாக இருக்கிறதென்றால் வரலாறும், அரசியல் ரசவாதமும் கலைஞர் கருணாநிதியுடன் கைகோர்த்துக் கொள்வது மாதிரித் தெரிகிறது. 60களில் இருந்தே மாநிலம் ஒரு பிராந்தியத் தலைவரையே முதல்வராக முடிசூட்டிவருகிறது.

உள்ளூர் அரசியல் சக்திகளுடன் ஒப்பிடும்போது ஒருவெளி மாநிலக் கட்சியாகவேதோற்றமளிக்கும் இ காங்கிரசுடன் கூட்டணி அமைத்திருக்கும் அ. இ அ தி மு கவின் தலைமைப்பதவியிலுள்ள ஜெயலலிதா, கருணாநிதியைப் போலத் தன்னைப் பிராந்திய நலன் காக்கும் தலைவரென்று மார்தட்டிக்கொள்ள முடியாது.

தன் குறுகிய கால ஆட்சியில் நல்ல நிர்வாகத்தை அளித்ததால் வாக்காளர்கள் தனக்கு ஓட்டளிப்பார்கள் எடுத்தேன், கவிழ்த்தேன் பாணியில் தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட பதவியில் மீண்டும் அமர்த்துவார்கள் என்றுநம்புகிறது தி மு க.

மத்தியிலுள்ள ஒரு சிறுபான்மை அரசு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருஜனநாயக அரசை டிஸ்மிஸ் செய்த அக்கிரமத்தையும் கட்சி பெரிதுபடுத்தும். ஆட்சிக் கலைப்பிற்குப் பிறகு கடலோர தொன்னந்தோப்பு பகுதிகளிலிருந்து நிறைய போராளிகள் கைது செய்யப்பட்டுவிடவில்லை என்கிற உண்மையையும் தி, மு. க.வுக்கு சாதகமான அம்சம்.

போராளிகள் பிரச்னை தேர்தலில் எடுபடுமா! என்ற சந்தேகம் இருப்பதால் ஜெயலலிதாவின் பிரசாரம் முழுக்க அவருடைய கவர்ச்சியை நம்பி இருப்பதைத் தவிர வேறு வழி இல்லை. கடந்த சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா அணி 21 சதவீத வாக்குகளையும் இப்போது இணைந்திருக்கும் ஜானகி அணி 9.1 சதவீதவாக்குகளையும் பெற்றிருந்தது. இந்தத்தடவை அ. இ. அ. தி. மு. க. 30 சதவீத வாக்குகளை பெறவேண்டும். சட்டமன்றத்தில் பெரும்பான்மை பெறத் தேவையான மீதியை இந்திரா காங்கிரஸ் அளிக்கவேண்டியிருக்கும்.

## இந்தியாருடே கண்ணோட்டம்

இ. காங்கிரஸ் – அ. இ. அ. தி. மு க உறவிலும் எப்படி ஒன்றும் சுமுகம் நிலவவில்லை. சட்டமன்றத்துக்கு முன்னைவிட அதிக இடங்களை விட்டுக்கொடுத்து நாடாளுமன்றத்துக்கு முன்பிருந்த அதே இடங்களைப் பெற்றிருப்பது குறித்து காங்கிரசில் ஒரு பிரிவினரிடையே அதிருப்தி நிலவுகிறது.

வன்னியர் சங்கத்தின் அரசியல் பிரிவான பாட்டாளி கட்சி களத்தில் இறங்குவது இரண்டு முன்னணிகளின் தேர்தல் கணக்குகளையும் தப்பாக்கிவிடலாம்.

"ஜெயலலிதா தமிழகத்தில் அரசியல் அனாதையாம் என்பது விரைவில் நிரூபிக்கப்படும் என்கிறார். டாக்டர் எஸ். ராமதாஸ். வன்னியர் பெரும்பான்மையாக வசிக்கும் வடஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் மிக அதிக இடங்களைப் பிடிக்கும் என்ற நம்பிக்கையிலிருக்கிறது; அது ஒவ்வொரு வாக்காளரும் 2 ரூபாய் அனுப்ப வேண்டும். என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டதில் இதுவரையிலும் 25 லட்ச ரூபாய் சேர்ந்திருப்பதை சுட்டிக்காட்டி ராமதாஸ் தன் வாதத்தை வலியுறுத்துகிறார். ஏப்ரல் இறுதிக்குள் 1 கோடி ரூபாய் வசூலித்து 50 லட்ச மக்களின் ஆதரவைப் பெறுவதுதான் பா. ம. க இலக்கு. ஒரு மூன்றாவது சக்தியாக தன்னை இனங்காட்டியிருக்கும் பா. ம. க. கருணாநிதி அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டதை கண்டனம் செய்தாலும் தேர்தலில் தனித்துதான் போட்டியிடப் போகிறது இது மண்டல் அறிக்கையைத் தாண்டி ஒரு படி மேலே சென்று விட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரே முதல்வர் ஆக்கப்படுவார்என்றும் ரிசர்வ் அல்லாத 190 தொகுதிகளில் 40 சதவித இடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை வேட்பாளர்களாகவே நிறுத்துவோம் என்றும் வக்குறுதியளித்திருக்கிறது 'இந்த மாதிரி செய்யவேறு எந்தக் கட்சியும் முன்வராது'' என்கிறார் ராமதாஸ்

பா. ம. க. வால் ஒரு அரசியல் புரட்சியை உருவாக்க முடியாமல் போனாலும் கூட அது ஆட்களைப் பிரித்து தி மு. க. வுக்கும் சாதகமாக்கக் கூடியவலிமை உடையது. முழுவதுமே வன்னியர்கள் உள்ள 20 லட்சம் பா. ம. க. உறுப்பினர்கள் பெரும் பாலானோர் காங்கிரஸ் காரர்களாக இருந்து பின்னர் எம். ஜி. ஆரின் ஆதரவாளர்களாக மாறியவர்கள். ஆக ஒரு குறிப்பிட்டளவுளம் ஜி. ஆர் -காங்கிரஸ் ஆதரவு வோட்டுக்கள் பா. ம. க. விற்கு கிடைக்கக் கூடும். சுமார் 25 இடங்களைக் கைப்பற்றினால் கூட அது மாநிலத்தின் அரசியல் கணக்குகளை மாற்றிவிடலாம், ஆனால் கருணாநிதியும், அதன் தேசிய முன்னணி கூட்டணிக்கட்சிகளும் - மாநில தின் ஜனதா தளம், இடதுசாரிகள் இரண்டுக்குமே ஓரளவுக்குத்தான் ஆதரவு அனைத்து பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வோட்டுகளை வளைத்துப் பிடிக்க முடியுமென்றால் பிறகு இவர்கள் தான் ராஜா வி. பி. சிங்கும் கருணாநிதியும் பிற்படுத்தப்பட்டோர் நலிவுற்றோரின் ரட்சகர். பிடிக்க ஆசைப்படும் அனைவரையும் மூட்டை கட்டி வீட்டுக்கு அனுப்பி வைத்து விடமுடியும்.

நன்றி: இந்தியா ருடே ஏப்ரல் 20)

# கடும் காற்றில் அகதிகள் பாதிப்பு!

(காங்கேசன்துறை)

இராணுவ நடவடிக்கையால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பல்வேறு இடங்களிலும் அமைக்கப்பட்ட தற்காலிக குடிசைகளில் வசித்துவரும் ஏராளமான அகதி மக்கள் யாழ். குடாவில் வீசும் கடுங்காற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பலமான காற்று கூரைத் தகரங்களையும், கூரை ஓலைகளையும் பிரித்து வீசுவதுடன் சமையல் செய்யமுடியாமல் மண்ணையும், குப்பைகளையும் அள்ளி வீசுவதாக தெரிவிக்கப் படுகிறது

இக்குடிசைகளில் வசித்த பல அகதிகள் அவற்றைவிட்டு வெளியேறி வேறிடங்களை நாடிச் செல்வதாகவும் கூறப் படுகிறது. (86)

## புதிய விடுதி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்திலுள்ள யாழ். பல்கலைக்கழக நுண்கலைக் கல்லூரி வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள விடுதி நாளை 3-ம் திகதி திறந்து வைக்கப் படவுள்ளது.

இவ்விடுதிக்கு செல்வி பி. குணரத்தினம் உப தலைவியாக நியமிக்கப்பட்டுள்ளார். (105)

# மீன்கறி பாண் சாப்பிட்ட அறுவர் மயக்கநிலையில்

(யாழ்ப்பாணம்)

மீன்கறியுடன் பாண் சாப்பிட்ட தாய் மற்றும் பிள்ளைகள் உட்பட ஆறுபேர் வாந்தியெடுத்து மயக்கமடைந்தனர்.

குருநகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த திருமதி லோறன்ஸ் மரியநாயகி (35 வயது), இவரது குழந்தைகளான லோஜினி (12 வயது), லோடவின் (10 வயது), லோ. றேசின் (9 வயது) லோ. நிசாந்தி (2வயது) ஆகியோரே மயக்கமடைந்தநிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (56)

# பாம்புதீண்டி சைக்கிள் ரயர் காற்றுப்போனது

(நாவற்குழி)

சைக்கிளில் வந்தவருக்குக் குறுக்கே வந்த பாம்பு ஒன்றின் மேல் சைக்கிள் ஏறியதால் சைக்கிள்காரர் சைக்கிளுடன் நிலத்திலே வீழ்ந்தார் பின் பாம்பு சைக்கிள் ரயரைக் கொத்தி ரயர் காற்றுப் போனது.

புத்தூர் சந்தியிலிருந்து கன்புளியடிக்கு இரவு 11 மணியளவில் வந்துகொண்டிருந்த மட்டுவிலைச் சேர்ந்த ம விக்கினேஸ்வரன் என்பவரே இவ்வாறு பாம்பிலிருந்து தப்பியவராவார்.

இச்சம்பவம் வேம்பிராய்க்கு அருகாமையில் நடைபெற்றுள்ளது. (107)

# மன்னார் ஆஸ்பத்திரியில் படையினர் நடமாட்டம்

(மாங்குளம்]

மன்னார் ஆதார வைத்தியசாலையில் சீருடையினரின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக தெரிய வருகிறது.

இராணுவ நடவடிக்கையின் போது காயம் அடைந்த இராணுவத்தினரில் பலர் இங்கு சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறப்படுறது.

இப்பகுதிகளில் உள்ள கால்நடைகளை இராணுவத்தினர் சுட்டு இறைச்சிக்காகப் பாவித்து வருவதாகவும் கூறப் படுகிறது. (150)

## இராணுவ நடவடிக்கை:

# பாணிதொழிற்சாலை பெரும் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் சேந்தான்குளத்திலுள்ள பாணித் தொழிற்சாலை அண்மையில் அப்பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து கைவிடப்பட்ட நிலையிலுள்ளது: இத்தொழிற்சாலை ஊழியர்களின் துணிகர முயற்சியினால் சில உபகரணங்களும், பெருமளவு விறகும் எடுத்து வரப்பட்டபோதிலும் சுமார் 4 லட்சரூபா பெறுமதியான மற்றும் உபகரணங்களும் மீட்கப்படாததினால் சங்கத்திற்கு பலத்த நஷ்டமேற்பட்டுள்ளது' (72)

# அகதி முகாம்களில் முதியோர்கள், சிறுவர் நோயினால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்]

அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் தீவுப்பகுதிமக்களில் பலர் பல்வேறு வருத்தங்களினால்யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்;

சொறி, சிரங்கு, காய்ச்சல், அம்மை போன்ற வருத்தங்களினால் குழந்தைகள் பீடிக்கப்பட்டுள்ளார்கள்.

வயோதிபர்கள் நெஞ்சுவலி தொய்வு வருத்தங்களினாலும் அவஸ்தைப் படுவதாகவும் தெரியவந்துள்ளது. சிலர் யாழ். போதனாவைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர். (56)

## இராசி பலன்

**02-05-1991**

**வியாழக்கிழமை**

திருதியை காலை 7-04வரை. கேட்டை மு. இ. 8-01வரை இராகுகாலம் பகல் 1-27 முதல் 2-57 வரை

மேடம்: மனக் குழப்பம் உறவினர் தொல்லை. அகால போஜனம்.

இடபம்: நினைத்தது கைகூடும். தொழில் சிறப்பு. சுயகாரியம்

மிதுனம்: காரிய பலிதம். அறிஞர் சந்திப்பு புதிய உறவு

கடகம்: தொழில் நஷ்டம் குடும்ப அலைச்சல். மனச்சுமை

சிங்கம்: அந்நிய வாசம் தொழில் மந்தம். சகோதர பகை.

கன்னி; தொழில் உறவு பாதிப்பு. குடும்ப மகிழ்ச்சி வாக்கு வன்மை.

துலாம்: விவேக மற்ற செயல் வாக்கு கலகம் கவலை மிகுதி

விருச்சிகம்: தொழில் பாராட்டு புதிய விதானம், மகிழ்ச்சி.

தனுசு: நோய் உபாதை, குடும்ப பிரிவு. புதியபிரச்சனை.

மகரம்: தொழில்மாற்றம். பண வரவு சகோதர உதவி

கும்பம்; காரிய வெற்றி பொதுப்பணி ஈடுபாடு புகழ்

மீனம்: பயணங்களால் அனுகூலம். புத்திரர் சிறப்பு: விருந்துபசாரம்.

• ஜோஸ்யர்

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விவசாயபீட இரண்டாவது பீடாதிபதியாக டாக்டர் ஏ. நவரத்தினராசா நியமிக்கப்பட்டுள்ளார்;

இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் மிருக வைத்தியத்துறைப் பகுதித் தலைவராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## கல்வி அதிகாரி பணிப்பு

(யாழ்ப்பாணம்]

பாடசாலை ஆசிரியர்கள் தத்தமது அதிபர்களை தங்கள் பாடசாலையில் நாளை 3ம் திகதி காலை 9-30 மணிக்கு சந்தித்து கல்வி அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்யும் பணியில் ஈடுபடும்படி பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா கேட்டுள்ளார்.

## வயோதிப மாது பலி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை சின்னமடுவில் நிலைகொண்டுள்ள படையினரால் சரவணை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் கரம்பன் மேற்கைச் சேர்ந்த திருமதி நாகம்மா நாகரத்தினம் (86 வயது) என்ற வயோதிபமாது பலியானார்.

# ஊழியர் சேமலாபத் திட்டம்

# ஒய்வூதியத்திட்டமாகமாற்றம்

(கொழும்பு)

ஊழியர் சேமலாபத் திட்டம் ஒய்வூதியத் திட்டமாக மாற்றப்படும். இதற்கான தீர்மானம் நேற்று அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது.

புதிய திட்டத்தின்கீழ் ஊழியர் எவரும் மேலதிகக்கொடுப்பனவுகளை இத்திட்டத்திற்கு வழங்கத் தேவையில்லை.

ஒரு ஊழியர்க்கு ஆகக் குறைந்தது 750 ரூபா ஒய்வூதியமாக வழங்கப்படும். காலத்துக்குக்காலம் ஏற்படும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புகளைக் கவனத்தில் கொண்டு ஒய்வூதியத்தொகை அதிகரிக்கப்படும்

ஆண்கள் 55 வயதிலும் பெண்கள் 50 வயதிலும் புதிய ஒய்வூதியத்திட்டத்தின் கீழ் ஒய்வுபெற முடியும் (வி

## கடலென திரண்ட மக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிபெற்ற எங்களின் கரங்களில் ஒருநாள் இந்தத் தேசத்தின் கொடிபட்டொளி வீசிப் பறக்கும். சுதந்திர மனிதர்களாகவிடுதலை அடைந்த எங்கள் வீதிகளின் வழியே நாங்கள் அணிவகுப்போம்

இது தவிர்க்க முடியாதது. ஏனெனில் எங்கள் இதயங்களில் விதைக்கப்பட்ட விடுதலை உணர்வானது வளர்ந்து விருட்சமாகி விட்டது

கடந்த காலங்களில் எங்கள் தேசத்தின் மீது சுமத்தப்பட்ட சுமைகள் கடுமையானவை, தாங்கமுடியாத துயரம் நிறைந்தவை. எமது வீதிகளிலும், வீடுகளிலும் குண்டுகள் வீசப்பட்டன தொழிலுக்கோ, தொழிலகங்களுக்கோ செல்ல முடியாதநிலை. எமது தேசம் பொருளாதார முற்றுகையிடப்பட்டது. நாம் நெருக்கப்பட்டோம் எமது குரல்வளை நெரிக்கப்பட்டது,

கடலெங்கும் திரிந்த கடற்படையினர் தொழிலுக்குச் செல்லும் எமது மீனவர்களை கடலுக்கு இரையாக்கினார்கள் வயல்களுக்குச் சென்ற பல தமிழர்கள் உரமாகிப் போயிருக்கிறார்கள் எல்லாத் தொழிலுக்குமே அடிப்படையான எரிபொருளும், மின்சாரமும் தடைசெய்யப்பட்டது விவசாய உற்பத்திக்குத் தேவையான அடிப்படை மூலப் பொருட்களும் தடை செய்யப்பட்டன. நாம் அழிந்து விடுவோமா அல்லது தப்பிப் பிழைத்து விடுவோமா? என்ற கேள்வி உலகில் எழுந்தது. எம்மிடமிருந்ததெல்லாம் சுதந்திர உணர்வும் மன வைராக்கியமும் மட்டும் தான் தம்மீது விதிக்கப்பட்ட எல்லாவற்றிற்குமாக தமிழர்கள் போராடினார்கள். இராணுவ முகாம்களின் வாசலிலும் காடுகளிலும், எல்லைகளிலும், ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காகப் போராடினார்கள். வயல்களிலும், கடலிலும் வாழ்வதற்காகப் போராடினார்கள். இப்படி எங்கும் போராட்டம் தொடர்ந்தது. தமிழீழ தேசத்தின் மீது இடப்பட்ட பொருளாதார அழுத்தத்திற்கு உள்ளாகவும், தமிழீழ தேசத்தவர்கள் தலைநிமிர்ந்தார்கள் தமது சொந்தக் காலில் நிற்க வெளிக்கிட்டார்கள். சொந்தப் பொருளாதார வாழ்வை ஏற்படுத்த விழைந்தார்கள்.

சிங்கள அரசு எம்மீது விதித்த பொருளாதாரத் தடை, எம்மை, சுயமாகவும் தனித்துவமாகவும் வாழ வழி வகுத்தது. தங்கு நிலையற்ற பொருளாதார வாழ்வுக்கு வழி செய்தது. இந்நடவடிக்கை தமிழீழத் தொழிலாளர்களை விழிக்கச் செய்தது.

இங்கு கடலெனத் திரண்டிருக்கும் மக்களின், தொழிலாளர்களின் சக்தி உலகத்திற்குப் பலவற்றைப் பிரகடனப் படுத்துகின்றது. நாங்கள் சுதந்திரத்தையும், விடுதலையையும் உயிரை விட உயர்வாக நேசிக்கின்றோம் என்பதைக் காட்டுகிறது. அதே நேரம் தமிழீழத்தவர்களின் பிரதிநிதிகள் புலிகள்தான் என்பதையும் வெட்டத்தெளிவாகக் காட்டி நிற்கிறது இன்று இங்கு வந்தவர்கள் இந்த மக்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டவர்கள் இதனை உணர்ந்துகொள்வார்கள் என நான் நினைக்கின்றேன்.

அண்மையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர், புலிகள் சனநாயக ரீதியில் நாங்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் என்பதை நிரூபிக்க வேண்டுமெனக் கேட்டிருந்தார்.

ஓர் இனத்தின் சுதந்திரத் தாகத்தையும், அடக்குமுறைக்குள்ளாகி ஒடுக்கப்படும் மக்களின் இதய உணர்வுகளையும் விளங்கிக்கொள்ள முடியாத இவர்கள், சனநாயகத்தைப் பற்றிப் போதனை செய்வது விசித்திரமானது;

இந்திய ஜனநாயகத்தைப் பற்றியும், தேர்தல் தார்ப்பரியங்களைப் பற்றியும் நாங்கள் நன்றாகவே அறிந்துள்ளோம் இந்திய அரசு இந்த மண்ணிலும் ஒரு தேர்தலை நடத்திக் காட்டியிருந்தது அத்தேர்தல் இந்திய சனநாயக முறை எப்படிப்பட்டதென எம் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இந்தியத் தூதுவரை நாமும் சில கேள்விகளைக் கேட்கலாம்: இந்தியாவின் இன்றைய பிரதமர் எத்தகைய சனநாயக வழியில் ஆட்சிக்கு வந்தார்? இந்தியாவின் பெருந்தொகையான மக்கள் இவருக்கும். இடைசியத்திற்கும் வாக்களித்தனரா என்று கேட்கலாம்

தமிழ்நாட்டில் பெரும்பான்மையான மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ்நாடு அரசு, எத்தகைய வழிமுறைகளில் கலைக்கப்பட்டது என்பதையும் கேட்கலாம். இவற்றுக்கு அவரிடம் பதில் இருக்காது. இந்தியத் தூதுவருக்கு தமிழ்மக்களின் போராட்ட சக்தி யார் என்பதை அறியும் ஆவலிருந்தால், அவர் இன்று இங்கு வந்திருக்கலாம் உணர்வால் இதயத்தில் ஊறியிருக்கும் விடுதலைப் பற்றால் அழிவையும், ஆபத்தையும் எதிர்பார்த்தபடி. அவற்றை ஏற்றுக்கொள்ளும் மன வலிமையுடன் இங்கு வந்திருக்கும் இந்த மக்கள் கூட்டத்தைப் பார்த்திருந்தால் அவருக்கு நிலவும் சந்தேகம் நீங்கியிருக்கும்

இந்திய அரசு இராணுவ ரீதியிலோ, அரசியல் ரீதியிலோ எமது தேசத்தில் தலையிடு செய்வதை நாம் விரும்பவில்லை. இந்திய அரசினர் ராஜதந்திர ரீதியில், தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு எடுக்கும் முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம். தமிழ் மக்களின் நலனை, நல்வாழ்வை, பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எந்தத் தீர்வைப் பற்றியும் பேசுவதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

நாம் இந்த வருட ஆரம்பத்தில் சமாதானத் தீர்வுக்காக பேச்சு வார்த்தைகளை நடாத்துவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கினோம்;

அதன் விளைவாக யுத்தநிறுத்தம் ஒன்றையும் கடைப்பிடித்தோம் மாங்குளத்திலும், கோட்டையிலும் இராணுவ வீழ்ச்சியடைந்த சிறிலங்கா அரசு, அந்த நிலையில் பேச்சு வார்த்தைக்கு வரத்தயாராக இல்லை இராணுவ மேலாதிக்க நிலையிலிருந்துகொண்டு பேச்சுக்களை நடத்தலாமென சிறிலங்கா அரசு எண்ணுகிறது.

இதனால் எம்மீது புதிய அழுத்தங்களையும், நிர்ப்பந்தங்களையும் செலுத்தலாம் என்று பிரேமதாசா அரசு தப்புக் கணக்குப் போடுகிறது

சிறிலங்கா அரசின் இந்த இராணுவவாத நிலையை, எம்மால் ஏற்றுக்கொள் முடியாது சர்வதேச சமுதாயமும் இதனை விளங்கிக் கொள்ள வேண்டும்;

இன்று சிறிலங்கா அரசிற்கு தமிழர் மீதான யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. பொருளாதார அழிவின் விளிம்பில் நிற்கும் சிறிலங்கா அரசு இந்நிதியை சர்வதேச நாடுகளிலிருந்தே பெறுகின்றது; நாட்டின் அபிவிருத்தி என்ற போர்வையில் பெறப்படும் இந்த நிதி தமிழினத்தின் அழிவிற்கே பயன்படுத்தப்படுகிறது

இந்நிலையில் அன்னியக்கடனுதவிக்காக பேச்சுவார்த்தை என்றும் சமாதானத் தீர்வென்றும், சிறிலங்கா அரசு வேசம் போடுகிறது

சிறிலங்கா அரசால் நாட்டில் சமாதானம் நிலவுகிறது என, தோற்றப்பாடு காட்டப்பட்டு பெறப்படும் இப்பணம் நாளை தமிழர்களின் இன அழிவுக்காக பயன்படும், இதில் எமக்கு சந்தேகமில்லை. இதனை சர்வதேச நாடுகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் புலிகள் இயக்கம் பலம் பொருந்திய நிலையிலிருந்து பேச்சுக்களை நடத்துவதும் தமிழரின் தன்னாட்சி உரிமைக்கு, சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை தேடுவதும் விடுதலைப் போராட்டத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும் என நாம் கருதுகின்றோம்.

அன்பான தமிழீழ மக்களே! இன்று தமிழீழத்தின் தென்முனையைச் சேர்ந்தவர்கள் தொழில், வாழ்வு, சொத்து, சுகம் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாக நிற்கிறார்கள் அவர்களும் ஒரு கிராமத்தில், தம் நிலத்தில் வாழ்ந்தவர்கள், இன்று காடுகளிலும் முகாம்களிலும் அகதிகளாக வாழ்கிறார்கள். இது, தென் தமிழீழத்தவர்களுக்குமட்டும் விதிக்கப்பட்ட வாழ்வல்ல. தமிழீழ தேசத்தின் ஒட்டுமொத்த நிகழ்ச்சி தமிழீழமெங்கும் தமிழர்கள் வர்க்க வேறுபாடற்று அழிக்கப்பட்டார்கள், அழிக்கப்படுகிறார்கள். தமிழீழ தேசத்தில் தொழிலாளர்களின் வாழ்வோ மக்களின் வாழ்வோ இந்த மண்ணின் விடுதலையின் பின்பு தான் சாத்தியமாகலாம். இது இந்த மண்ணின் நீண்ட போராட்ட வரலாறு கற்றுத் தந்த பாடம்

தமிழீழ தேசத்திற்கு இன்று தேவையெல்லாம் விடுதலையும் சுதந்திரமும்தான் மரணத்தின் வாசலில் நின்று கொண்டு மரணம் எப்போதும் வரலாமென்பதை ஏற்றுக் கொண்டு போராடும் தமிழீழ இளைஞர்களே இன்று தமிழீழ அன்னைக்கு தேவைப்படுகிறார்கள். இழப்புகளும் துன்பங்களும்தான் விடுதலைப் போராட்டத்தின் நியதி. தமிழீழ தேசத்தில் நடக்கும் நியாயமான தர்மத்துக்கான போராட்டம் ஒருநாள் வெற்றி பெறும்

வர்க்க வேறுபாடற்ற, சமத்துவமான சமூக அமைப்பையுடைய தமிழீழ தேசம் தோற்றம் பெறும்.

புலிகள் வரலாறு படைப்பார்கள், வீரமும் விடுதலை உணர்வும், உலகம் வியக்கும் தியாக வாழ்வும், உலகின் வரலாற்றில் தமிழர்களை உயர்வாகப் பொறிக்கும் என்றார். [வி)

## 500 இளைஞர்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களில் 3500 பேர் வரை விடுதலை செய்யப்பட்டிருந்தார்களாம்.

இவர்களில் 500 க்கும் மேற்பட்டோரை ஆயுத பாணிகள் கடத்திச் சென்றுள்ளதாகவும் பெற்றோர் புகார் செய்துள்ளனர் [சி]

## தமிழர்க்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்ராமன் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும், ஒற்றுமைக்கும் குந்தகம் ஏற்படாத வண்ணமும்' நாடு பிளவுபடாத விதத்திலும் தமிழர் பிரச்னை தீர்க்கப் படவேண்டும்.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் அனைத்தும் தீர்க்கப்படுவதுடன் அவர்களுக்கு சுயாட்சி உரிமையும் வழங்கப்படவேண்டும் என்றும் ஆலோசனை கூறியுள்ளார்;

## புலிகள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு விதத்தில் அவர் 'நீல ஆடுகள்' என சுதந்திரக்கட்சியையே குறிப்பிட்டுள்ளதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி]

## கரிகாலன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடமை நேரத்தில் கடத்திச் செல்லப்பட்டார்.

பின் 27ம் திகதி இவரது சடலம் சாக்கொன்றினுள் போடப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இவரது கொலைக்கு தாமே பொறுப்பென 'பிளக் கோப்ரா' என்ற அமைப்பு உரிமைகோரி சடலத்தின் அருகில் துண்டொன்றும் போடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தமிழர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்துவதற்கு தனிப்பட்ட முறைகளிலும் கூட்டு அமைப்பு முறைகளிலும் விவசாயம் செய்வதற்கு ஊக்கம்கொடுத்தோம். இதை சில பேர் நாம் காணிகள் எடுப்பதாக விஷமத்தனமான பிரகாசம் செய்தார்கள்.

நாங்கள் இந்த நிலங்களில் குரக்கன், பயறு போன்ற சிறு தானிய உற்பத்தியை செய்யுங்கள் என்று வற்புறுத்தினோம், சில பேர் புகையிலை, வெங்காயம் செய்தார்கள். புகையிலை, வெங்காயம் விற்பதற்கு பேச்சுவார்த்தை வராதா என ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். இனிமேலாவது எமது சிறுதானிய உற்பத்தியை பெருக்குவோம்.

இன்றைய இலங்கை ஜனாதிபதி சிங்களச்சட்டம் கொண்டு வந்தால்தான் தமிழர்களின் பிரச்சனை பூதாகரமாகத்தோன்றியுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை கேட்கிறார். இப்படி பசப்புவார்த்தைகள் பேசும் இலங்கை ஜனாதிபதியின் யூ. என். பி கட்சி தான் எமது மலையகத்தமிழர்களின் குடியுரிமையை பறித்தது. எமக்கு எதிராக புதிய அரசியலமைப்பை ஏற்படுத்தினார்கள் ஆகவே சிங்களவர்களை நாங்கள் நம்பமுடியாது

எமது தேச விடுதலையைக் காட்டிக் கொடுப்பவர்களை ஒருபோதும் நாம் மன்னிக்கப் போவதில்லை.

நாங்கள் ஒழிவு மறைவற்றவர்கள், எதையும் பகிரங்கப் படுத்திதான் செய்வோம். சமூக விரோதிகள் எவரானாலும் அவர்கள் குடும்பத்துக்கு செல்லியே நடவடிக்கைகளை எடுப்போம்

எங்கள் போராளிகள் 24 மணிநேரமும் கடமைபுரிய வேண்டும். அவனுக்கு வரையறுக்கப்பட்ட மணித்தியாலங்கள் இல்லை. அதற்காக நாம் ஊதியம் கேட்கவில்லை.

எவ்வாறுயினும் எங்கள் போராட்டத்துக்கு எங்களுடன் கூடவே வாருங்கள். வராது போனால் நீங்கள்தான் அழிவீர்கள் என்றார்.

(152)

## 10,000 பேர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 2500 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது

அவசர நிலைமைகளைச் சமாளிக்க உதவுமாறு பிரதமர் உலக நாடுகளைக் கேட்டுள்ளார். (சி)

## 7 தமிழர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இதேவேளை மட்டக்களப்பில் தேற்றுமுன் தினமும் அதற்குமுதல்நாளும் புலிகளுக்கும் படையினருக்குமிடையே கடும் மோதல் நடைபெற்றுள்ளது. இம்மோதல்களில் தீசன் (பயோகராசா- மண்டூர்) குணசீலன் (கா. கணேசமூர்த்தி-பேரதீவு), ராம்குமார் (புவனநாதன்-மகிழடித்தீவு) விக்கினேஸ்வரன் (புல்லுமலை) பரமானந்தன் [க. பஞ்சாகரன்-பழுகாமம்) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

இதேவேளை ஆனையிறவில் நடைபெற்றமோதலில் ஆனந்தன் [பத்மநாதன் கமலநாதன் - கிளிநொச்சி] வீரமரணமடைந்தார். [சி]

## தமிழீழத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முழங்கப் பவனியுடன் ஊர்வலம் ஆரம்பமானது:

இவ்வூர்வலம் காங்கேசன் துறை வீதி வழியாக வந்து, கட்டா தெருச் சந்தியை அடைந்து. அங்கிருந்து அரசடி வீதி வழியாக வந்து நல்லூர் சேர்ந்தது.

இவ்வூர்வலத்தில் பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், முதியவர்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட லட்சக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

இவற்றில் 'அந்நிய நாட்டு மோகம் கொண்டு இளைஞர்களும் யுவதிகளும் படும் அவஸ்தை', போதைவஸ்துக்களால் இளைஞர்களுக்கு ஏற்படும் தீங்குகளைச் சித்தரிக்கும் ஊர்திகளும், துலா மிதித்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் காட்சியும், கடற்றொழிலாளர் தம்மைத் தாக்கவரும் கடற்படையினரைத் துப்பாக்கி கொண்டு கலைக்கும் காட்சிகளும் பொதுமக்களை மிகவும் கவரக்கூடியதாக இருந்தது.

மேற்படி ஊர்வலத்தில் பெரும்பாலும் பெண்களே மிகக் கூடுதலாகக் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

கொதிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது இளைஞர்களும், கைக்குழந்தைகளை அணைத்தபடி தாய்மாரும் ஒரு காலை இழந்த நிலையில் ஊன்றுகோலின் துணையுடன் சில இளைஞர்கள் நீண்டதூரத்தை நடந்தவண்ணம் உணர்ச்சி மிக்க கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலத்தில் வந்த காட்சி, பார்ப்போரை மெய் சிலிர்க்கவைத்தது

நேற்று பி ப. நல்லூரில் நடைபெற்ற மேதினக் கூட்டம் முடிவடைந்த பின்பும் மருதனார்மடத்தில் ஆரம்பமான ஊர்திகள் நல்லூரை நோக்கி வந்தவண்ணமே இருந்தது. (வி- 56- 86-109)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 65ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மே மாதம் 2ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Regestered as a News Paper at the General Post office Lankaunder Licence numper B/100306/81.